# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## *2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 09 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2022.09.12 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


# டாக்டர் சமன் வீரசிங்க மன்றம் (கூட்டிணைத்தல்)

*(தனியார் உறுப்பினர்களின் சட்டமூலம்)*

**டாக்டர் சமன் வீரசிங்க மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

*காலி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சந்திம வீரக்கொடி அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : *ரூபா 18.00*** **தபாற் செலவு : *ரூபா 15.00***

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## டாக்டர் சமன் வீரசிங்க மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை

''டாக்டர் சமன் வீரசிங்க மன்றம்'' என அழைக்கப்படுவதும், அறியப்படுவதுமான நிறுவகமொன்று இலங்கையில் அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட சபையோடு சொல்லப்பட்ட குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுறக் கொண்டுநடாத்தும் நோக்கத்துடன் இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும்:

அத்துடன் சொல்லப்பட்ட நிறுவகமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுவரை சொல்லப்பட்ட கழகத்தினால் வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாலாலும் அத்துடன் அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்

***1***. இச்சட்டம், 2022 ஆம் ஆண்டின்  ஆம் இலக்க, டாக்டர் சமன் வீரசிங்க மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

டாக்டர் சமன் வீரசிங்க மன்றத்தைக் கூட்டிணைத்தல்

***2***. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும் தற்போது குறித்த ''டாக்டர் சமன் வீரசிங்க மன்றம்'' (இதனகத்துப்பின்னர் ''மன்றம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய அவ்வெண்ணிக்கையினரான உறுப்பினர்களும், இதனகத்துப் பின்னர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அதன்கீழ் ஆக்கப்படக்கூடிய விதிகளுக்கும் அமைய உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படும் அத்தனை ஆட்களும் ''டாக்டர் சமன் வீரசிங்க மன்றம்'' என்னும் பெயர் மகுடத்தின்கீழ் இடையறா வழியுரிமை கொண்ட (இதனகத்துப்பின்னர் கூட்டிணைக்கப்பட்ட ''கூட்டிணைக்கப்பட்ட குழு'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) ''டாக்டர் சமன் வீரசிங்க மன்றம்'' (கூட்டிணைத்தல்) குழுவாதலும் வேண்டும்

அத்துடன் அப்பெயர் கொண்டு அது வழக்குத் தொடுக்கலாமென் பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கப்படலாம் என்பதுடனும், பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், அதன் விருப்பப்படி அதனை மாற்றவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் கொண்டிருத்தல் வேண்டும். கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனமானது 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்புகள் (பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின் அர்த்தத்திலும் நோக்கங்களுக் காகவும் ஒரு வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்பு என கருதப் படுதலும் வேண்டும்.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் பொதுக் குறிக் கோள்கள்

**3**. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக் கோள்கள் பின்வருவனவாக இருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) இலங்கை வாழ் சகல இனங்களுக்கிடையே சமாதானம் மற்றும் பரஸ்பர நல்லுறவு ஆகியவற்றை மேம்படுத்தல்;

(ஆ) பாடசாலை செல்கின்ற சிறுவர்களுக்கும் முன்பாடசாலை சிறார்களுக்கும் புத்தகங்கள், சீருடைகள், கற்றல் உபகரணங்கள், இசைக்கருவிகள், போசாக்குமிக்க உணவுகள், விளையாட்டு உபகரணங்கள், கல்விசார் சாதனங்களை வழங்கலும், அவர்களுக்கு புலமைப் பரிசில்களை வழங்கலும்;

(இ) தேவையுள்ள ஆட்களுக்கு மருந்துகளையும் உணவுகளை யும் வழங்குதல்;

(ஈ) பெண்கள் மற்றும் சிறுவர்களின் சகல உரிமைகளைப் பாதுகாத்தலும் மேம்படுத்தலும்;

(உ) அடிப்படை உரிமைகளை பாதுகாத்தலும் மேம்படுத்தலும்;

(ஊ) இளைஞர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சி நெறிகளை ஏற்பாடு செய்தல் ; அத்துடன்

(எ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை ஒத்த ஏனைய உள்நாட்டு, நிறுவனங்கள் அல்லது அமைப்புக் களுடன் ஒருங்கிணைந்து செயற்படுதல்:

ஆயின் மேற்படி நோக்கங்கள் அரசாங்கத்தின் ஏதாவது அமைச்சு அல்லது திணைக்களம் அல்லது ஏதாவது மாகாண சபையினால் மேற்கொள்ளப்படும் பணியுடன் முரண்பாட்டை உருவாக்காத வகையில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் அலுவல்களை முகாமை செய்தல்

**4.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் முகாமையும் நிருவாகமும் தவிசாளர், செயலாளர், பொருளாளர் மற்றும் பதினொரு பேரைக் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கிணங்கத் தெரிவு செய்து நியமிக்கப்பட்ட பணிப்பாளர்கள் சபை ஒன்றின்மூலம் இச்சட்டத்தின் ஏற்பாடு களுக்கும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கும் அமைய மூன்று வருடங்கள் நிருவகிக் கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் முதலாவது பணிப்பாளர்கள் சபையானது இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகித்த நிருவாக சபையின் உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும் என்பதோடு ஒரு வருடத்திற்கு மேற் படாத காலத்திற்கு பதவி வகித்தலும் வேண்டுமென்பதோடு கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இடைக்கால நிருவாகத்திற்கான விதிகளை ஆக்கவும் சபையை தெரிவுசெய்து நியமனம் செய்வதற்கும் தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் பொதுவான தத்துவங்கள்

**5.** இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின தும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக் கோள்களை அல்லது அவற்றுள் எதனையேனும் மேம்படுத்துவதற்கு அல்லது முன்னேற்றுவதற்கு அவசியமானவையான அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும், செய்யவும், புரியவும், நிறை வேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவ முடையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள், கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளுக் கமைய வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல், செயற்படுத்தல், முடிவுறுத்தல் என்பவற்றுக்கும், பிணைப்பொறுப்புடனோ அல்லது

பிணைப்பொறுப்பின்றியோ கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களை முகாமை செய்தல், பொறுப்பின்றியோ பணம் கடன் பெறுவதற்கும் அல்லது திரட்டுவதற்கும் அல்லது சேகரிப்பதற்கும், அதன் நிதிகளை முதலீடு செய்வதற்கும் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும், சேவையாளர்களையும் வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்தல், வேலையிலிருந்து நீக்குதல் என்பவற்றுக்குமான தத்துவமும் அடங்கும்.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் விதிகள்

**6**. (1) ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக் கும் உறுப்பினர்களில் மூன்றிலிரண்டு பங்கினருக்குக் குறையா தோரின் வாக்குப்பெரும்பான்மைகொண்டு, பின்வரும் கருமங்களுள் எல்லாவற்றுக்குமாக அல்லது எவற்றுக்குமாகவும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்:-

(அ) உறுப்பாண்மை வகுக்கப்படுதலும், உறுப்பினர்களை அனுமதித்தலும், விலக்குதல் அல்லது அவர்களை பதவியை விட்டு விலக்குதலும் மற்றும் செலுத்தவேண்டிய அங்கத்துவ கட்டணமும்;

(ஆ) கூட்டுத்தாபனத்தினதும், பணிப்பாளர் சபையினதும் கூட்டங்களைக் கூட்டுதலும், நடாத்துதலும் அவற்றில் அவதானிக்கப்படவேண்டிய நடடிவக்கை முறைகள், அத்தகைய கூட்டங்களுக்கான கூட்ட நடப்பெண் மற்றும் அவர்களது தத்துவங்களையும், கடமைகளையும் பிரயோகித்தலும் புரிதலும்;

(இ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் என்போரின் நியமனங்களும் தத்துவங்களும் கடமைகளும் மற்றும் பணிகளும்;

(ஈ) கூட்டுத்தாபகத்தினதும் பணிப்பாளர் சபையினதும் உறுப்பினராக வருவதற்கான தேவையான தகைமைகள்;

(உ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் மற்றும் அலுவலர்களின் தெரிவு, பதவி விலகல் மற்றும் பதவி அகற்றல் என்பன;

(ஊ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஆதனத்தை நிருவகித்தலும், முகாமை செய்தலும்.

(2) கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்படும் விதிகள் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதி ஒன்று ஆக்கப்படுவதைப்போன்று அதேபோன்ற கூட்டத்திலும் அதேமுறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம் ஒழிக்கப்படலாம் அல்லது அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தினால் அவ்வாறு ஆக்கப்படும் ஒவ்வொரு விதியும் அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டு மூன்று மாதங்களினுள் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென்பதோடு அத்தகைய வெளியிடப்படும் திகதியில் நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

நிதியத்திற்கு செலுத்தப்படற்பாலனவும் நிதியத்தால் செலுத்தப்படவேண்டியதுமான கடன்கள்

**7**. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று இருக்கின்ற மன்றத்தின் எல்லாக் கடன்களும், பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதலும், கொடுத்துத் தீர்க்கப்படுதலும் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று மன்றத்துக்கு வருமதியான எல்லாக் கடன்களும் அல்லது இதன்பின்னர் பெறப்படவுள்ள எல்லாப் பணங்களும் மன்றத்திற்கு செலுத்தப்பட வேண்டிய சந்தாப் பணம், பங்களிப்பு என்பன இந்த சட்டத்தின் நோக்கத்திற்காக செலுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நிதியம்

**8**. (1) கூட்டுத்தாபனம், அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். கூட்டுத்தாபனத்துக்காக அல்லது அதன் கணக்கால் கொடை, அன்பளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியக்கொடைகள் என்ற வகையாக இதுகாலவரை அல்லது இதன்பின்னர் பெறப்படவுள்ள எல்லாப் பணங்களும் மன்றத்தினால் தீர்மானிக்கக்கூடிய ஒரு வங்கியிலோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளிலோ கூட்டிணைக்கப்பட்ட குழுவின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழு இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும், பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்கான எல்லாப் பணத் தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) கூட்டிணைக்கப்பட்ட குழு ஒவ்வொரு நிதியாண்டுக்குமாக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் விபரமான அறிக்கையொன்று கிடைக்கப்பெற்ற உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதிகளின் விபரங்களுடன் 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்புகள் (பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்புகள் பதிவாளருக்கு ஒவ்வொரு நிதியாண்டின் முடிவுத் திகதியிலிருந்து ஆறு மாதங் களினுள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**கூட்டிணைக்கப் பட்ட குழு அசையும் அசையாத ஆதனத்தை வைத்திருக்கலாம்**

**9.** கூட்டிணைக்கப்பட்ட குழுவானது ஏதேனும் கொள்வனவு, நன்கொடை, குத்தகை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு, ஏதும் உடன்படிக்கையின்கீழ் அல்லது வேறுவகையாகக் கூட்டுத்தாபனத்துக்கு உரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைப் பெறவும், வைத்திருக்கவும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இயலுமானதாலும், ஆற்றலுடையதாதலும் வேண்டும். அத்துடன் அத்தகைய எல்லா ஆதனங்களும், அவற்றை விற்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறு வகையில் கையாளவுள்ள முழுத்தத்துவத்தைக் கூட்டுத்தாபனம் கொண்டிருத்தல் வேண்டும். ஆயின் அனைத்து வெளிநாட்டு அளிப்புகள், கொடைகள் மற்றும் நன்கொடைகள் ஆகியவற்றின் பெறுகை தொடர்பில் நிதி என்ற விடயம் குறித்தொதுக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சின் வெளியக வளங்கள் திணைக்களித்திலிருந்து எழுத்திலான முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

**உறுப்பினர் களின் பொறுப்பை வரையறுத்தல்**

**10.** கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினரெவரும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் கடன்களையும், பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்க்கும் நோக்கத்துக்காக அவரிடமிருந்து கூட்டுத்தாப

னத்துக்கு வருமதியாகவிருக்கக் கூடியவாறான அத்தகைய உறுப்பினரிடமிருந்து செலுத்தப்படவேண்டிய அங்கத்துவ தொகையை விஞ்சுகின்றதான ஏதேனும் உதவு தொகையைச் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

*கலைக்கப் பட்டதன் மீது எஞ்சியிருக்கின்ற ஆதனம்*

**11.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மீது அதன் எல்லாக் கடன்களையும், பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்த்த பின்னர் எத்தகையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபன உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படலாகாது. ஆனால் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை உடையதும் அவற்றின் விதிகளின்படி அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டதுமான வேறு நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றுதல் வேண்டும். அத்தகைய நிறுவனமானது கலைக்கப்படும் பட்சத்தில் அல்லது அதற்கு முன்னர் கூட்டுத்தாபன உறுப்பினர்களால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*கூட்டிணைக்கப் பட்ட குழுவின் கணக்குகளும் கணக்காய்வும்*

**12.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாக இருத்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது, அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் என்பன பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் கணக்குகள், அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளினது கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் நியமிக்கப்பட்ட தகைமை பெற்றவொரு கணக்காய்வாளரினால் வருடாந்தம் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவின், "தகைமை பெற்ற கணக்காய்வாளர்" என்பது-

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக உள்ளவரும் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளரொருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) கணக்காளர் குழுமமொன்றின் வதிவுள்ள பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவும் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளரொருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள கணக்காளர் குழுமம் ஒன்று என்று பொருள்படும்.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் இலச்சினை

**13.** கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இலச்சினையானது, தலைவரினதும் அல்லது சபையினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்டவாறாக சபை உறுப்பினர் ஒருவரினதும் பேரவையின் இன்னுமோர் உறுப்பினரதும் முன்னிலையிலன்றி, எத்தன்மையினதுமான சாசனத்திலும் பொறிக்கப்படுதல் ஆகாதென்பதுடன், அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்குச் சான்றாக அச்சாசனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும் அப்படி கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதனின்றும் தனிவேறான தாதலும் வேண்டும்.

குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணல்

**14.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும், இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது

அவர்களின்கீழ் உரிமை கோருபவர்களும் தவிர்ந்த வேறு ஏதேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**15.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.